RBI/2009-10/21 ஜூலை 1, 2009

தொகுப்புச் சுற்றறிக்கை எண் 1/2009-10

அந்நியச் செலலாவணி வணிகத்தில் ஈடுபட்ட அங்கீகரிக்கப்பட்ட அனைத்து வங்கிகளுக்கும்

அன்புடையீர்

**வெளிநாட்டிலுள்ள இந்தியத் துணை நிறுவனம் (WOS),**
**இந்தியருடன் இணைந்து மேற்கொள்ளப்படும் திட்டங்கள் (JV)**
**இவற்றில் இந்தியக் குடியிருப்போர் செய்யும்**
**நேரடி முதலீடுகள் குறித்த தொகுப்புச் சுற்றறிக்கை**

அந்நியச் செலாவணி நிர்வாகச் சட்டம், 1999 (சட்டப்பிரிவு எண் 42) உடன், நவம்பர் 19, 2004 தேதியிட்ட அறிவிப்பு எண்.GSR 757(E) மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட ஜூலை 7, 2004 தேதியிட்ட அறிவிப்பு எண் 120/RB-2004 உடன் சேர்த்துப் படிக்கையில், இணைந்து மேற்கொள்ளப்படும் அயல்நாட்டுத் திட்டங்கள், துணை நிறுவனங்கள, குடியிருப்போர் நேரடியாக முதலீடு செய்வது அனுமதிக்கப்பட்டுள்ளது.

2. இணைந்து மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள இந்தியத் (முழுவதும் சொந்தமான) துணை நிறுவனங்களில் செய்யப்படும் நேரடி முதலீடுகள் குறித்த நடைமுறையிலுள்ள அனைத்து அறிவுறுத்தல்களையும் அடக்கிய தொகுப்புச் சுற்றறிக்கை ஓரிடத்தில் அனைத்தையும் தொகுத்து அளிக்கிறது. தொகுக்கப்பட்ட சுற்றறிக்கைகளின் பட்டியல் பின்னிணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.

3. இத்தொகுப்புச் சுற்றறிக்கையின் காலவரையறை ஓராண்டாகும். ஜூலை 1, 2010 முதல் இது செல்லாததாகி, அவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டு அடுத்த சுற்றறிக்கை வெளியிடப்படும்.

சலீம் கங்காதரன்
முதன்மைப் பொது மேலாளர்

**அட்டவணை**


A.1 முன்னுரை
A.2 சட்டரீதியான அடித்தளம்
A.3 தடைப்படுத்தப்பட்டவை
A.4 பொது அனுமதி

**பகுதி B – அயல்நாட்டில் நேரடி முதலீடு**

B.1 தன்னிச்சையான வழிமுறை
B.2 எண்ணெய் துறையிலுள்ள பதிவுசெய்யப்படாத அயல்நாட்டு நிறுவனங்களில் இயல்பான வழிமுறையில் முதலீடு
B.3. நிதியளிக்கும் முறைமை
B.4 ஏற்றுமதி மற்றும் வசூல் பாக்கிகளை மூலதனமாக்கல்
B.5 நிதியியல் சேவைத் துறையில் முதலீடு
B.6 அயல்நாட்டில் பதிவு செய்யப்பட்ட குழுமங்களின் பங்குப் பத்திரங்களில் முதலீடு / வட்டி விகிதம் குறிக்கப்பட்ட கடன் பத்திரங்களில் முதலீடு.
  (i) பட்டியலிடப்பட்ட இந்தியக் கம்பெனிகள் செய்யும் அட்டவணை முதலீடு
  (ii) பரஸ்பர நிதிநிறுவனங்கள் செய்யும் முதலீடுகள்
B.7 ரிசர்வ் வங்கியின் அனுமதி
B.8. சக்தி மற்றும் இயற்கை வளங்கள் துறையில் முதலீடுகள்
B.9. தனிநபர்கள் நடத்தும் வணிக நிறுவனங்கள் செய்யும் அயல்நாட்டு முதலீடுகள்
B.10. பதிவுசெய்யப்பட்ட அறக்கட்டளை/சமூக அமைப்புகளில் முதலீடுகள்
B.11. முதலீட்டுக்குப் பின்னர் மாற்றங்கள் / JV/WOS முதலீடுகளில் கூடுதலாக முதலீடுகள் செய்தல்
B.12. ஒப்பந்தம் / ஏலம் எடுக்கும் முறை மூலம் அயல்நாட்டுக் குழுமத்தைக் கைக் கொள்ளுதல்
B.13 இந்திய நிறுவனத்தின் பொறுப்புகள்
B.14 JV/WOSன் பங்குபத்திரங்களை விற்பனை மூலம் மாற்றுதல்
B.15 பங்குகளை அடமானம் வைத்தல்
B.16 அயல்நாட்டு நேரடி முதலீடுகளில் பாதுகாப்பு ஏற்பாடு

**பகுதி C. அயல்நாட்டு நேரடி முதலீடுகளில் பாதுகாப்பு ஏற்பாடு**

C.1 சில நிகழ்வுகளில் அந்நியப் பங்குப் பத்திரங்களை வாங்க / கைக்கொள்ள அனுமதி
C.2 இந்தியாவிலுள்ள குடியிருப்போர் அயல்நாட்டு பங்குப்பத்திரங்களை மாற்றுதல்
C.3 நிகழ்வுகளில் பொது அனுமதி

**பகுதி II**

அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கிகளுக்கான நடைமுறை அறிவுறுத்தல்கள்

1. அனுமதிக்கப்பட்ட கிளைகள்
2. ஜுலை 7, 2004 தேதியிடப்பட்ட அந்நியச் செலாவணி நிர்வாகச் சட்டம் (FEMA) எண்.120/2004-RB விதிமுறை 6ன்படி செய்யப்பட்ட முதலீடுகள்
3. பொதுவான செயல்முறை அறிவுறுத்தல்கள்
4. ஜுலை 7, 2004 தேதியிடப்பட்ட அந்நியச் செலாவணி நிர்வாகச் சட்டம் (FEMA) எண்.120/2004-RB விதிமுறை 11ன்படி செய்யப்பட்ட முதலீடுகள்
5. தனிச்சிறப்புடைய அடையாள எண் வழங்குதல்
6. பங்குப்பத்திர வியாபார மாற்றங்கள் மூலம் முதலீடு
7. ஜுலை 7, 2004 தேதியிட்ட அந்நியச் செலாவணி முதலீட்டுச் சட்டம் எண் 120/2004-RB விதிமுறை 9ன்படி செய்யப்படும் முதலீடுகள்
8. ADR/GDR உடணைந்த ஏற்பு பங்கு விருப்பத்திட்டம் மூலம் அயல்நாட்டு பங்குப்பத்திரங்கள் வாங்குதல்
9. பங்கு ஏலம் எடுக்க உறுதிச் சான்று / உறுதிப் பணம் கட்ட பணம் அனுப்பும் வகைகள்
10. JV/WOSல் பங்குப்பத்திரங்களை விற்பனை மூலம் மாற்றுதல்
11. முதலீடுகளுக்கான சான்று ஆதாரங்களை சரிபார்த்தல்

**<u>பின்னிணைப்பு</u>**

**A.**

**B.**

**C.**

**பிற்சேர்க்கை**

<u>பகுதி-I</u>

## பகுதி-A பொதுவானவை

### A.I. முன்னுரை:

1. இந்தியத் தொழில்முனைவர்கள் உலகளாவிய வியாபாரத்தில் பங்கேற்று வளர்ப்பதில், இணைந்து மேற்கொள்ளும் திட்டங்கள் (JV) மற்றும் அயல்நாட்டு இந்தியத் துணை நிறுவனங்களின் முதலீடுகள் சிறந்த வழிமுறைகளாக உள்ளன. இந்தியாவிற்கும் மற்ற நாடுகளுக்குமிடையே உள்ள பொருளாதாரக் கூட்டுறவை வலிமைப்படுத்தும் ஊடகமாக நாடுகள் இணைந்து மேற்கொள்ளும் திட்ட முயற்சிகள் அமைகின்றன. பன்னாட்டு முதலீடுகளால் பின்வரும் நன்மைகள் விளைகின்றன. தொழில்நுட்பப் பரிமாற்றம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் பகிர்தல், உலகளாவிய சந்தையை அணுகிடும் வாய்ப்பு, வாணிகச் சின்னத்தை உலகச் சந்தையில் பிரபலப்படுத்துதல், வேலைவாய்ப்பு அதிகரித்தல், இந்தியாவிலும் மற்றுமுள்ள நாடுகளிலுள்ள கச்சாப் பொருட்களை முழு அளவில் உபயோகப்படுத்துதல் ஆகியவையாகும். அயல்நாட்டு வர்த்தகத்தை வளப்படுத்தும் காரணியாகவும் இது அமைந்து, ஏற்றுமதி குறிப்பாக, இயந்திரங்கள், வாணிபப் பொருட்களின் ஏற்றுமதி பெருகியது. லாப ஈவுப் பங்குத்தொகை, ராயல்டி, தொழில்நுட்ப பரிமாற்றக் கட்டண வரவு மற்றும் முதலீடுகள் மீதான உரிமைகள் இவற்றின் வாயிலாக அந்நியச் செலாவணி வரவுகள் பெருகின.

2. பொருளாதாரக் கொள்கையில் பொதுவாகவும், அந்நியச் செலாவணி விதிமுறைகளில் குறிப்பாகவும், தனித்தன்மையைக் காட்டும் வண்ணம் தாராளமயமாக்கல் கொள்கை உணர்வினைப் பின்பற்றி ரிசர்வ் வங்கி நடப்புக் கணக்கு மற்றும் மூலதனக் கணக்கு நடவடிக்கைகளின் விதிமுறைகள் இந்திய ரிசர்வ் வங்கி தொடர்ந்து தனது விதிமுறைகளைத் தளர்த்தியும் நடப்புக் கணக்கு மற்றும் மூலதனக் கணக்கு நடவடிக்கைகள் சார்ந்த செயல்முறைகளை எளிமைப்படுத்தியும் உள்ளது.

### A.2. <u>சட்ட அடிப்படை</u>

1). அனுமதிக்கப்பட்ட மூலதனக் கணக்கு நடவடிக்கைகளாகவும், கணக்கில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கும் அந்நியச் செலாவணியை வழங்கிடும் அதிகாரத்தை ரிசர்வ் வங்கிக்கு (மத்திய அரசின் ஆலோசனையுடன்) அந்நியச் செலாவணி நிர்வாகச் சட்டப் பிரிவு 6 அளிக்கிறது. அதே சட்டத்தின் பிரிவு எண் 6(3)ன் கீழ் கிளைப் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு, அவற்றைத் தடைசெய்யவோ, கட்டுப்படுத்தவோ, நெறிமுறைக்கு உட்படுத்தவோ ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

2). மேற்குறிப்பிட்ட அதிகாரத்தை செலுத்தும் முகமாக, முந்தைய அறிவிப்புகளைப் புறந்தள்ளி (மே 3, 2000 தேதியிட்ட FEMA19/RB.2000 அறிவிப்பு) அவற்றில்

மாற்றங்களைச் செய்து அந்நியச் செலாவணி நிர்வாகம் (பன்னாட்டு பங்கு பத்திரம் வெளியீடு பரிமாற்றம் குறித்த) விதிகள் 2004 ஜுலை 7, 2004 தேதியிட்ட அறிவிப்பு எண் FEMA120/RB-2004 மூலமாக திருத்தப்பட்டவை.

அறிவிப்பு எண் FEMA.132/2005.RBI 31.3.2005 தேதியிட்டது.

அறிவிப்பு எண் FEMA.135/2005.RBI 17.5.2005 தேதியிட்டது.

அறிவிப்பு எண் FEMA.139/2005.RBI 11.8.2005 தேதியிட்டது.

அறிவிப்பு எண் FEMA.150/2006.RBI 21.8.2006 தேதியிட்டது.

அறிவிப்பு எண் FEMA.164/2007.RBI 9.10.2007 தேதியிட்டது.

அறிவிப்பு எண் FEMA.173/2007.RBI 19.12.2007 தேதியிட்டது.

அறிவிப்பு எண் FEMA.180/2008.RBI 5.9.2008 தேதியிட்டது.

அறிவிப்பு எண் FEMA.181/2008.RBI 1.10.2008 தேதியிட்டது.

இனி அறிவிப்பு என்று குறிப்பிடப்படும்) இந்தியாவில் குடியிருப்போர் வாங்கும், மற்றும் பன்னாட்டு பங்குப் பத்திரங்கள் குறித்த விதிமுறைகள், இணைந்து மேற்கொள்ளும் திட்டங்களில், மற்றும் முழுவதும் கைக்கொண்டு இந்திய நிறுவனங்கள் நடத்தும் பன்னாட்டு நிறுவனங்களில் முதலீடுகள் குறித்த விதிமுறைகள்.

**A.3 தடைகள்:** வீடு நிலம் சார்ந்த சொத்துகள் (Reg.2(p) FEMA.120யில் குறிக்கப்பட்டுள்ள விளக்கப்படி) அல்லது வங்கி சார்ந்த துறையில் ஈடுபட்டுள்ள அயல்நாட்டு நிறுவனங்களில் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

**A.4 பொது அனுமதி**: அறிவிப்பிலுள்ள 4ம் எண் விதிமுறையின்படி, இந்திய குடியிருப்போருக்கு பின்வரும் வகையில் வாங்கப்படும் / கைக்கொள்ளப்படும் பங்குப் பத்திரங்களுக்குப் பொது அனுமதி வழங்கப்படுகிறது.

(a) அந்நியச் செலாவணி இருப்புக் கணக்கிலிருந்து வாங்கப்பட்டவை

(b) அந்நியச் செலாவணியில் கைவசம் வைத்திருக்கும் பங்குபத்திரங்களுக்காக ஊக்கவகையில் அளிக்கப்பட்ட பங்குப் பத்திரங்கள்

(c) இந்தியாவில் நிரந்தரமாகக் குடியிராதபோது, வெளிநாட்டில் உள்ள அந்நியச் செலாவணி ஆதாரங்கள் மூலம் வாங்கப்பட்டவை.

மேற்குறிப்பிட்ட வகையில் வாங்கப்பட்ட / கைக்கொள்ளப்பட்ட பத்திரங்களை விற்பதற்கும் பொது அனுமதி உண்டு.

## பகுதி B - இந்தியாவிற்கு வெளியே நேரடி முதலீடு

**B.1. இயல்பான முறை**:

1. அறிவிப்பின் விதி எண் 6ன்படி பன்னாட்டில் இந்திய நிறுவனங்கள் “இணைந்து மேற்கொள்ளும் திட்டங்கள்” மற்றும் “முழுதும் கைக்கொண்டு இந்திய நிறுவனங்களை நடத்தும் பன்னாட்டு துணை நிறுவனங்கள்” ஆகியவற்றில் ஒரு இந்திய நிறுவனம், தணிக்கை செய்யப்பட்ட கடந்த இருப்புநிலை, அறிக்கையின்படி, இந்திய நிறுவனத்தின் நிகர மதிப்பின் 400%க்கும் மிகாமல் முதலீடுகள் செய்யலாம்.

2. இத்தகைய நிகர மதிப்பு 400% என்பது, ADR/GDP மூலமாக சேகரிக்கப்படும் நிதி மற்றும் இந்திய நிறுவனங்களின், அந்நியச் செலாவணிக் கணக்கிலிருக்கும் வருவாய் சேகரிப்புகள் இவற்றிலிருந்து செய்யப்படும் முதலீடுகளுக்கு மேற்குறிப்பிட்ட உச்ச வரம்பு பொருந்தாது. இந்திய நிறுவனம் முதலில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக (வகை 1) வங்கியை அணுக வேண்டும். ODL படிவத்தில் குறிப்பிடப்பட்ட இணைப்புகள் / ஆவணங்கள் இவற்றோடு இணைத்து முதலீட்டுக்கான பண அனுப்புதல்களை செய்திட வேண்டும்.

3. இணைந்து மேற்கொள்ளப்படும் பன்னாட்டு திட்டமுதலீடுகள் முழுவதுமாக இந்திய நிறுவனம் கைக்கொள்ளும் துணை நிறுவனங்கள் ஆகியவற்றில் மூலதனத்திற்கு அளிக்கப்படும் தொகை, அவற்றிற்கு தரப்படும் கடன் தொகை, அவற்றின் சார்பாக அளிக்கப்படும் கடன் ஈட்டுத்தொகை ஆகியவை மேற்குறிப்பிட்ட உச்சவரம்பில் அடங்கும். இவற்றில் செய்யப்படும் முதலீடுகள் பின்வரும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(a) இந்திய நிறுவனம் முதலீட்டில் பங்கு முதலீடு செய்துள்ள அயல்நாட்டு நிறுவனத்திற்கு மட்டும் கடன், கடன் உத்தரவாதம் ஆகியவற்றையும் – குழுமரீதியாகவே, தனிப்பட்டமுறையிலோ முதன்மை அல்லது பிணை உத்தரவாதமாகவோ, ஆதரவளிக்கும் நிறுவனம் அல்லது சதோதர அல்லது ஒரே குழுவைச் சார்ந்த நிறுவனத்தின் உத்தரவாதமாகவோ, அந்த நிதியுதவி அமையலாம்.

(i) இந்திய நிறுவனத்தின் நிகர மதிப்பில் வகைக்கேற்ப 400 சதவீதம் அளவிற்கு உட்பட்டே, எல்லாவகை கடன், உத்தரவாதம் அல்லது நிதி உதவிகள் அமையலாம்.

(ii) தொகை குறிப்பிடாத உத்தரவாதம் என்று ஏதுமில்லை. தொகை குறிப்பிடப்பட வேண்டும்.

(iii) நிறுவனங்கள் அளிக்கும் கடன் உத்தரவாத வகையைப் போலவே, எல்லா கடன் உத்தரவாதங்களும், ரிசர்வ் வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும் (ODI பகுதி II படிவத்தில்) இந்திய வங்கிகள் JV, மற்றும் WOSக்கு வெளிநாட்டில் வழங்கும் கடன் உத்தரவாதங்கள் இந்த வரம்பெல்லைக்கு உட்படாது. அவை ரிசர்வ் வங்கி அவ்வப்போது வழங்கும் விவேகமான நடைமுறைக் கொள்கைகளுக்கு உட்பட்டு அமைந்திடும்.

(b) ரிசர்வ் வங்கி அளிக்கும் ஏற்றுமதியாளரின் எச்சரிக்கைப் பட்டியல் / ரிசர்வ் வங்கி வெளியிடும் வங்கியியல் முறைமையில் தவறியோர் பட்டியல் / இந்திய கடன் தகவல் குழுமம் அளிக்கும் பட்டியல் / ஆய்வு நிறுவனம், சட்ட அமலாக்கப் பிரிவு, கட்டுப்பாட்டுத் துறை இவற்றின் ஆய்வு / இவை எவற்றிலும் அந்த இந்திய நிறுவனம் இடம் பெற்றிருக்கக் கூடாது.

(c) JV / WOS உடன் தொடர்புடைய எல்லா நடவடிக்கைகளும் இந்திய நிறுவனம் தேர்ந்தெடுத்துள்ள ஒரு அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கியின் கிளை மூலமாகவே நடத்தப்பட வேண்டும்.

(d) நடப்பிலிருக்கும் அயல்நாட்டு நிறுவனம் ஒன்றை பகுதியாகவோ முழுமையாகவோ கைக்கொள்ளும்போது அதில் முதலீடு 5 மில்லியன் அமெரிக்க டாலர் அளவைத் தாண்டும் பொழுது, அந்தக் குழுமத்தின் பங்கு மதிப்பினை பின்வருபவரே கணக்கிடமுடியும். (1) SEBIயில் பதிவு செய்யப்பட்ட வணிக வங்கியாளர் (Merchant Banker). வகை 1. (2) அல்லது வெளிநாட்டில் உள்ள வணிக வங்கியாளர் (Merchant Banker) இயங்கிவரும் நாட்டின் கட்டுப்படுத்தும் அதிகாரமுடைய நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டவராயின் (3) மற்றவை அனைத்திலும் பட்டயக் கணக்காளர் அல்லது சான்றிதழ் வழங்கப்பட்ட பொதுக் கணக்காளர்

(e). ஆயினும் பங்கு மாற்றங்கள் மூலம் முதலீடு செய்பவர்கள் விஷயத்தில், தொகை பாகுபாடின்றி, பங்குகளின் மதிப்பீட்டை, SEBIயில் பதிவு செய்யப்பட்ட வணிக வங்கியாளர் வகை 1, அல்லது வெளிநாட்டில் உள்ள, இயங்கிவரும் நாட்டின் கட்டுப்பாட்டு அதிகார நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட வணிக வங்கியாளரால் மட்டுமே செய்ய முடியும். அத்துடன், அந்நிய முதலீட்டு மேம்பாட்டு மன்றத்தின் (FIPB) ஒப்புதலும் பெறப்பட வேண்டும்.

(f) ஒரு பதிவு செய்யப்பட்ட இந்திய கூட்டாளி வர்த்தக நிறுவனம் JV/WOSன் பன்னாட்டு முதலீடுகளை, பங்குபத்திரவடிவில் வைத்திருக்க விரும்பினால், அதற்கான மொத்த பணத்தையும், அந்த நிறுவனமே அளிக்க விழைந்தால், அந்த நிறுவனத்தின் கூட்டாளிகள் தங்களின் பெயரில் அந்த முதலீட்டுப் பங்குகளை நிறுவனத்தின் சார்பில் வைத்திருக்கலாம். ஆயின் அந்த நிறுவனங்கள் செயல்படும் நாட்டின் விதிமுறைகள் இவ்வாறு வைத்திருக்க செயல்முறைத் தேவைகள் கொண்டிருத்தல் வேண்டும்.

(g). i. ஒரு இந்திய நிறுவன "சிறப்பு நோக்க ஏற்பாட்டு சாதனத்தின்(SPV)" மூலம் வெளிநாட்டிலுள்ள JV/WOSல் இயல்பான வழிமுறையில் முதலீடு செய்ய அனுமதி உண்டு. ஆனால் இதற்கு சில கட்டுப்பாட்டு விதிமுறைகள் உள்ளன. ரிசர்வ் வங்கி வெளியிடும் வங்கியியல் முறைமையில் தவறியோர் பட்டியல் எச்சரிக்கைப் பட்டியல்/ இந்தியக் கடன் தகவல் குழுமம் அளிக்கும் பட்டியல்/ஆய்வு நிறுவனம் சட்ட அமலாக்கப் பிரிவின் ஆய்வு ஆகிய இவை எவற்றிலும் இந்திய நிறுவனத்தின் பெயர் இடம் பெற்றிருக்கக்கூடாது. அவ்வாறு இடம் பெற்றிருந்தால் இந்திய ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இத்தகு முதலீடுகளுக்கும் தேவைப்படும்.

ii. இயல்பான வழிமுறையில் அந்நிய முதலீட்டிற்காக "சிறப்பு நோக்க ஏற்பாட்டு சாதனத்தை"(SPV) அயல்நாட்டில் நிறுவ வேண்டுமானால் JV/WOS முதலீடுகளுக்காக மட்டுமே அது செய்யப்படவேண்டும்.

(h).அந்நியச் செலாவணி மாற்று பங்குப்பத்திரங்கள் மற்றும் சாதாரண பங்குகள் (டெபாசிட்டு ரசீதுகள்) திட்டம் 1993 மூலம் ADR/GDRக்கு மாற்றாக வழங்குகையில், ஒரு நியாயமான வணிகத்தில் ஈடுபட்டிருக்கும் அயல்நாட்டு குழுமத்தின் பங்குகளை இந்திய நிறுவனம் வாங்குவதற்கு அனுமதி உண்டு. மத்திய அரசு அவ்வப்போது இது குறித்து வழங்கிய வழிகாட்டுதல்களின்படி கீழ்க்கண்ட விதிகளுக்கும் உட்பட்டு இந்த அனுமதி வழங்கப்படும்.

i. ADR/GDR இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஏதாவது ஒரு பங்குப்பத்திர பரிவர்த்தனை நிலையத்தில் குழுமத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும்.

ii. பங்குப்பத்திரங்கள் வாங்கிட அளித்த ADR/GDR இந்திய நிறுவனம் வெளியிடும் புதிய பங்குகளால் காப்பு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

iii. இந்திய நிறுவனத்தின் மொத்த அந்நியச் செலாவணி முதலீடு, விரிவாக்கம் செய்யப்பட்ட மூலதனத்தில் ADR/GDR வெளியீட்டின் மூலம் செய்யப்பட்ட முதலீடுகளில், நேரடி முதலீட்டு விதிகளின்படி ஒவ்வொரு பிரிவுக்கென விதிக்கப்பட்ட உச்சவரம்பை மீறாதிருக்க வேண்டும்.

iv. பன்னாட்டு நிறுவனங்களின் பங்குகளின் மதிப்பீடு பின்வரும் முறையில் செய்யப்படும்.

   a. தகுதி வாய்ந்த பங்கு பரிவர்த்தனை நிலையங்களில் பட்டியலிடப்படாத பங்குகளாயின் மதிப்பீடு, முதலீடு செய்த வங்கியின் மதிப்பீடுகளின்படி செய்யப்படும்.

   b. வெளிநாட்டு பங்குப்பத்திரக் குழுமங்களில் வெளியிடப்பட்ட சராசரி விலை 3 மாதத்தின் (பங்குகள் கைக்கொள்ளப்பட்டதற்கு முந்தைய மாதத்திலிருந்து) அதனுடன் முதலீட்டு வங்கி புத்திசாலித்தனமான கணிப்பினால் சேர்க்கும் பிரீமியம் தொகையையும் கூட்டிய விலையின்படி மதிப்பீடு செய்யப்படும்.

(4). பங்குப்பத்திரங்களை கைக்கொள்ளும் நடவடிக்கை நிகழ்ந்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இந்திய நிறுவனம் ODI படிவத்தில் அந்த தகவலை அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கிக்கு தெரிவிக்க வேண்டிய தகவலாக அளித்திட வேண்டும்.

**குறிப்பு:** நேபாளத்தில் முதலீடு, இந்திய ரூபாயில் மட்டுமே செய்யப்பட வேண்டும். பூடானில் முதலீடுகள் இந்திய ரூபாயிலோ அல்லது மாற்றக் கூடிய அந்நியச் செலாவணியிலோ செய்யலாம். எளிதில் மாற்றத்தக்க அந்நியச் செலாவணியில் செய்யப்பட்ட முதலீடுகளில் தவணைகள் பாக்கி இருந்தால், அவற்றின் விற்பனை, முழு விற்பனைப் பணம் ஆகியவை இந்தியாவிற்கு முழுமையாக மாற்றக்கூடிய செலாவணிகளில் மட்டுமே இருக்க வேண்டும். **பாகிஸ்தானில் செய்யப்படும் முதலீடுகளுக்கு தானியங்கி வழிமுறை பொருந்தாது.**

## B.2. எண்ணெய் துறையிலுள்ள பதிவுசெய்யப்படாத அயல்நாட்டு நிறுவனங்களில் இயல்பான வழிமுறையில் முதலீடு

1) எண்ணெய் துறையிலுள்ள பதிவு செய்யப்படாத பன்னாட்டு நிறுவனங்களில் நவரத்னா பொதுத்துறை நிறுவனங்கள், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு குழு விதேஷ் லிமிடெட் ஆகியவை முதலீடுகள் செய்யலாம். தகுந்த அதிகாரியால் ஒப்புதல் அளிக்கப்படும்பட்சத்தில், இத்தகு முதலீடுகள் இயல்பான வழிமுறையில் அங்கீகரிக்கப்பட்ட முகமைகள்-வகை/வங்கிகள்

மூலமாக எந்தவித உச்சவரம்பின்றி செய்யப்படலாம்.

2) இதர எண்ணெய் குழுமங்களும் இயல்பான வழிமூலம் பதிவு செய்யப்படாத பன்னாட்டு நிறுவனங்களில் முதலீடுகள் செய்யலாம். ஆயினும் இத்தகு முதலீடுகள் தகுந்த அதிகாரியால் ஒப்புதல் அளிக்கப்பட்டு குழுமங்களின் நிகர மதிப்பில் 400% அளவில் இருக்கலாம். இதோடு அத்தகு குழுமத்தின் நிர்வாக மன்றம் இத்தகு முதலீட்டுக்கு சாதகமாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்க வேண்டும். அந்த தீர்மானத்தின் நகல் இணைக்கப்பட்டு அனுமதி பெறப்பட வேண்டும். இந்த முதலீட்டின் அளவு நிறுவனத்தின் நிகர மதிப்பில் 400%விட அதிகமாகுமானால் இந்திய ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி பெறவேண்டும்.

### B.3. முதலீட்டில் நிதி வழங்கும் முறை

1). பின்வரும் நிதிகளால், JV/WOSல் செய்யப்படும் அயல்நாட்டு முதலீடுகள் அமையலாம்.

(i) இந்தியாவிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கியிலிருந்து அந்நியச் செலாவணி எடுக்கப்படலாம்.
(ii) ஏற்றுமதி மூலதனமாக மாற்றப்படலாம்.
(iii) பங்குகள் மாற்றம் மூலம் (முன்பு கூறப்பட்டவைகளில் மதிப்பீடு செய்யப்படலாம்).
(iv) அந்நிய வர்த்தக கடன்கள் மற்றும் அந்நியச் செலாவணி மாற்றுவகைப் பத்திரங்களை விற்பதன்மூலம் கிடைத்தவை.
(v) டெபாசிட்டரி ரசீதுகள் திட்டம் 1993 மூலம் அந்நியச் செலாவணி மாற்று பத்திரங்கள் மற்றும் சாதாரண பங்குகள் இவற்றிற்காக வெளியிடப்படும் ADR/GDR இவற்றிற்கும் மாற்றாக அல்லது இவை குறித்த மத்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி வெளியிடப்பட்டவை.
(vi) இந்தியாவிலுள்ள அந்நியச் செலாவணி ஈட்டுவோரின் அந்நியச் செலாவணிக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டது.
(vii) ADR/GDR வெளியீடுகள் மூலம் கிடைத்த அந்நியச் செலாவணி மேற்குறிப்பிட்ட (vi) மற்றும் (vii)ற்கு மொத்த நிகரமதிப்பின் 300/200 சதவீத என்கின்ற உச்சவரம்பு பொருந்தாது. நிதியியல் துறையைப் பொறுத்தவரை நிதியாக்க முறையைக் கருதாது அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட விதி 7 பொருந்தும்.

2). இந்தியாவில் உள்ள குடியிருப்பாளர்கள் பத்திரங்களை வாங்கவும், கைக்கொள்ளவும் பின்வரும் முறையில் செயல்பட பொதுவாக அனுமதி வழங்கப்படுகிறது.

i. RFC கணக்கிலுள்ள பணத்தைக் கொண்டு வாங்கலாம்.

ii. அந்நியப் பண மதிப்பில் கைவசமிருக்கும் பங்குபத்திரங்களின் ஊக்கப்பங்குகளாக பெறலாம்.

iii. நிரந்தரமாக இந்தியாவில் தங்கியிராத சமயங்களில், வெளிநாட்டில் வைத்திருக்கும் அந்நியப் பணச்செலாவணியைக் கொண்டு முதலீடுகளை செய்யலாம்.

**B.4 ஏற்றுமதி மற்றும் அதன் வசூல் பாக்கிகளை மூலதனமாக்குதல்**

(1) அந்நிய நிறுவனங்களிடமிருந்து வரவேண்டிய பின்வரும் பாக்கிகள், ஏற்றுமதி, கட்டணம், ராயல்டி, மற்ற உரிமையுள்ள கோரல்கள், தொழில்நுட்ப பரிமாற்றம், தொழில் ரீதியான ஆலோசனை, நிர்வாகம் மற்றவை சார்ந்த ஆலோசனைகள் குறித்த கட்டணங்கள் ஆகியவற்றை இந்திய நிறுவனங்கள் வரம்பிற்குட்பட்டு மூலதனமாக மாற்றிக் கொள்ளலாம். ஏற்றுமதி செய்யப்பட்ட நாளிலிருந்து 6 மாதத்திற்குள் அளிக்கப்படாத வசூல் பாக்கிகள், மூலதனமாக்கப்படுவதற்கு ரிசர்வ் வங்கியின் அனுமதி தேவை.

(2) ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியுடன், JV உடன்படிக்கையின்றியே, அயல்நாடுகளுக்கு கணினி மென்பொருள் சேவையை ஏற்றுமதி செய்யும் இந்திய மென்பொருள் ஏற்றுமதியாளர், அந்த அயல்நாட்டு நிறுவனத்தின் பங்குகளை ஏற்றுமதியின் 25% அளவு வரைப் பெற்றுக்கொள்ள இயலும்.

**B.5 நிதியியல் சேவைத்துறைகளில் முதலீடுகள்**

1. நிதியியல் துறையில் ஈடுபடும் நிறுவனத்தில் முதலீடு செய்யும் இந்திய நிறுவன அறிவிப்பிலுள்ள விதி எண் 7ன்படி கருத்துப்படி, கீழ்க்கண்ட கட்டளைகளையும் கூடுதலாக நிறைவேற்ற வேண்டும்.

(i) நிதியியல் துறை நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்தியாவிலுள்ள கட்டுப்பாட்டு அதிகாரமுடையவரிடம் அது பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(ii) நிதியியல் சேவை நடவடிக்கைகளால் முந்தைய மூன்று நிதியாண்டுகளில் நிகர லாபம் ஈட்டியிருக்க வேண்டும்.

(iii) இந்தியாவிலும் அயல்நாட்டிலும் உள்ள தொடர்புடைய கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து நிதியியல் துறை சார்ந்தே நடவடிக்கைகளில் முதலீடு செய்ய அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

(iv) இந்தியாவில் கட்டுப்பாட்டு அதிகாரி வகுத்துள்ள விவேகமான கொள்கைக்கான போதிய மூலதன விகிதத்தை கடைப் பிடித்திட வேண்டும்.

2. JV/WOSன் ஒரு படி கீழேயுள்ள துணை நிறுவனங்களும் கூடுதலாக எந்தவொரு முதலீடும் நிதியியல் சேவைத் துறையில் செய்திட மேற்குறிப்பிட்ட கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும்.

3. நிதியியல் துறையில் நெறிமுறைக்கு உட்படும் நிறுவனங்களும், அயல்நாட்டு முதலீடுகள் செய்கையில் மேற்குறிப்பிட்ட வழிகாட்டுதல்களைக் கடைப்பிடித்திட

வேண்டும். நிதியியல் துறைசார்ந்த நெறிமுறைக்குட்படாத நிறுவனங்கள், நிதியியல் சாராத நடவடிக்கைகளில் முதலீடு செய்திட பன்னாடுகள் பொருட்கள் பரிவர்த்தனை மையங்களில் வாணிபம் செய்யவும், அந்நியச் செலாவணி பரிவர்த்தனையில் ஈடுபட JV/WOS தொடங்கி நடத்தவும், செய்யும் செயல்பாடுகள், நிதியியல் துறை சார்ந்த செயல்பாடுகளாகக் கருதப்பட்டு, Forward Markets Commission ஒப்புதலைப் பெறவேண்டும்.

**B.6. அயல்நாடுகளில் பதிவு செய்யப்பட்ட குழுமங்களின் பங்குப்பத்திரங்கள் / மதிப்பிடப்பட்ட கடன் பத்திரங்களில் முதலீடு**

**<u>1. (i) பட்டியலிடப்பட்ட இந்தியக் குழுமங்கள் செய்திடும் அட்டவணை முதலீடுகள்</u>**

பட்டியலிடப்பட்ட இந்தியக் குழுமங்கள் தங்கள் முந்தைய தணிக்கைச் செய்யப்பட்ட இருப்புநிலை அறிக்கையின்படி, உள்ள நிகர மதிப்பில் 50% வரை பன்னாட்டுக் குழுமங்களின் (i)பங்குகள், (ii)பத்திரங்கள், (iii) குறித்த வருவாய் பத்திரங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யலாம். ஆனால் இத்தகு பன்னாட்டு குழுமங்களின் வெளியிடும் பத்திரங்கள் கடன் மதிப்பீட்டு நிறுவனங்களால் முதலீட்டு மதிப்பீட்டில் தரந்தாழ்ந்தவையாக, மதிப்பிடப்படாதவையாக இருக்கவேண்டும்.

**(ii) <u>பரஸ்பர நிதிகளின் முதலீடுகள்:</u>**

SEBIயில் பதிவு செய்யப்பட்ட பரஸ்பர நிதிகள் பின்வரும் வகையில் மொத்தத்தில் 7 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பைவிட அதிகமில்லாமல் முதலீடுகளைச் செய்யலாம்.

i. இந்திய மற்றும் அயல்நாட்டுக் குழுமங்களின் ADR/GDRக்கள்
ii. அங்கீகரிக்கப்பட்ட பங்குபரிவர்த்தனை மையங்களில் பட்டியலிடப்பட்ட பன்னாட்டு குழுமங்களின் ஈவுப்பங்குகள்
iii. பன்னாட்டு பங்குபரிவர்த்தனை மையங்களில் பட்டியலிடப்படும் முதலிலும், தொடர்ந்தும் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் பங்குகள்.
iv. முழுமையாக மாற்றும் திறனுடைய அந்நியச் செலாவணியில் உள்ள பன்னாட்டு கடன் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்ட கடன் தரமதிப்பீட்டு நிறுவனத்தால் முதலீட்டுக்குத் தகுதியுடையதல்ல என்கின்ற நிலையைத் தாண்டி மதிப்பீடு செய்யப்பட்ட குறுகிய அல்லது நீண்டகால கடன் பத்திரங்கள்.
v. முதலீட்டுத் தகுதிக்கு கீழே மதிப்பீடு பெறாத பணச்சந்தை உபகரணங்கள்
vi. முதலீட்டுத் தகுதிக்கு கீழே உள்ளவற் என்று மதிப்பீடு பெறாத குறையெதிர் கூட்டாளி(counterparty) இருப்பின், ரிப்போவில் முதலீடு செய்யலாம். ஆனால் பரஸ்பர நிறுவனங்களில் கடன் வாங்கி இத்தகு முதலீடுகளை செய்வதாக அமையக் கூடாது.

vii. முதலீட்டுத் தகுதியுடையதல்ல என்று மதிப்பிடப்படாததாக உள்ள நாடுகளின் அரசு பத்திரங்கள்

viii. அங்கீகரிக்கப்பட்ட பங்குபரிவர்த்தனை மையங்களில், வர்த்தகம் செய்யப்படும். ஹெட்ஜிங், போர்ட்போலியோ(hedging & portfolio) மாற்றங்களுக்காகப் பத்திரங்களை பின்புலமாக கொண்ட டெரிவேடிவ்ஸ் (derivatives).

ix. முதலீட்டுக்குத் தகுதியுடையதல்ல என்று மதிப்பிடப்படாத பன்னாட்டு வங்கிகளில் குறுகிய கால வைப்புகள்

x. a) பன்னாட்டு பரஸ்பர நிதி நிறுவனங்கள், அயல்நாட்டு ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட யூனிட்ஸ்டிரஸ்ட் நிறுவனங்கள் வெளியிடும் யூனிட்டுகள் பத்திரங்கள் b) பன்னாட்டு பங்குபரிவர்த்தனை மையங்களில் பட்டியலிடப்பட்ட நிலம், வீடு, மனை போன்ற சொத்துக்கள் முதலீட்டு டிரஸ்டுகள் வெளியிடும் பத்திரங்கள் மற்றும் c) பட்டியலிடப்படாத பன்னாட்டு பத்திரங்கள் (நிகர சொத்துக்களின் மதிப்பில் 10% மிகாமல்)

2. சில தகுதி வாய்ந்த இந்திய பரஸ்பர நிதிகள் ஒட்டுமொத்தமாக பன்னாட்டு அந்நியச் செலாவணி வர்த்தக நிதிகளில் 1பில்லியன் அமெரிக்க டாலர் வரை SEBIயின் அனுமதி பெற்று முதலீடு செய்யலாம்.

3. உள்நாட்டு துணிகர மூலதன நிதிநிறுவனங்கள் (SEBIயில் பதிவு செய்யப்பட்டவை) அயல்நாட்டிலுள்ள துணிகர மூலதன நிறுவனங்களின் பங்குகள், பங்குகளோடு தொடர்புடைய பத்திரங்களில் 500 மில்லியன் அமெரிக்க டாலர் அளவு வரை முதலீடு செய்யலாம். பரஸ்பர நிதிநிறுவனங்கள் மற்றும் துணிகர மூலதன நிதிகள், இவ்வாறு செய்ய விரும்பும்போது SEBIஐ அனுமதிக்காக அணுகலாம்.

4. மேற்குறிப்பிட்ட முதலீட்டாளர்கள் விற்பதற்கு பொது அனுமதி வழங்கப்படுகிறது.

**B.7.ரிசர்வ் வங்கியின் அனுமதி:**

வெளிநாட்டில் செய்யப்படும் நேரடி முதலீடுகளுக்கு ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி தேவை. அங்கீகரிக்கப்பட்ட முகவர் வகை-1 வங்கிகள் மூலமாக, தேவையான ஆவணங்களுடன் இணைத்து ODI படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.

இத்தகைய விண்ணப்பங்களை ஆய்வு செய்கையில் அனைத்திற்குமிடையே, ரிசர்வ் வங்கி கீழ்க் கண்ட காரணிகளைக் கருத்தில் கொண்டு செயல்படும்.

(a) வெளிநாட்டிலுள்ள JV/WOS நிறுவனங்களின் பொருளாதார ரீதியாக செல்லுபடியாகுமா என்பதை தோராயமாக கவனிக்கும்

(b) இத்தகு முதலீடுகள் அளிக்கும் இந்தியாவின் அயல்நாட்டு வர்த்தக வாய்ப்பு மற்றும் அவற்றால் இந்தியாவிற்கு கிடைக்கும் பல்வகைப் பயன்கள்.

(c) இந்திய நிறுவனம், தொடர்புடைய அயல்நாட்டு நிறுவனம் இவற்றின் நிதிநிலை, வர்த்தக செயல்பாடுகளின் சீரான ஓட்டம்.

(d) அயல்நாட்டிலுள்ள JV/WOSன் வணிகம் அல்லது அவற்றோடு தொடர்புடைய வணிக செய்ல்பாடு இவற்றில் இந்திய நிறுவனத்தின் திறமை மற்றும் அனுபவம்.

**B.8. சக்தி மற்றும் இயற்கை வளங்கள் துறையில் முதலீடுகள்:**

இந்தியக் குழுமங்கள் தங்களின் நிகரமதிப்பில் (முந்தைய தணிக்கை செய்யப்பட்ட இருப்பு நிலைக் குறிப்பின்படி) 400% ற்கும் அதிகமாக, அயல் நாட்டிலுள்ள சக்தி (உம். எண்ணெய், எரிவாயு, கரி, தாதுப் பொருட்கள்) துறையிலுள்ள JV/WOSல் முதலீடுகள் செய்வதற்கான விண்ணப்பங்களை ரிசர்வ் வங்கி கவனமாக எண்ணிப் பார்க்கும். அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் வகை-1 வங்கிகள் தங்களின் பிரதிநிதித்துவத்தின் கீழுள்ள நிறுவனங்களிடமிருந்து வரும் இத்தகு விண்ணப்ப்ங்களை குறிப்பிட்ட செயல்முறைப்பதி ரிசர்வ் வங்கிக்கு அனுப்பி வைக்கலாம்.

**B.9. தனிநபர்கள் நடத்தும் வணிக நிறுவனங்கள் செய்யும் அயல்நாட்டு முதலீடுகள்**

1). தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலின் பலன்கள் சிறந்த வர்த்தகப் பதிவுகள் உள்ள அதிகளவில் ஏற்றுமதி செய்யும் நட்சத்திர அந்தஸ்து உள்ள வர்த்தக நிறுவனங்களில் தனியார் மற்றும் பதிவு செய்யப்படாத கூட்டணி வர்த்தக நிறுவனங்களும், ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியோடு, அயல்நாடுகளில் JV/WOSஐ பின்வரும் தகுதி, நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தபின் நிறுவலாம். ODI படிவத்தில் விண்ணப்பம், தலைமை பொதுமேலாளர், அந்நியச் செலாவணித் துறை (அயல்நாட்டு முதலீடுகள் பிரிவு), இந்திய ரிசர்வ் வங்கி, மைய அலுவலகம், 'அமர்' கட்டிடம், 5ம் தளம், கோட்டை, மும்பை 400001 என்ற முகவரிக்கு அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கி மூலம் அனுப்பலாம். அங்கீகரிக்கப்பட்ட முகவர் வகை-1வங்கி, இத்தகு முதலீடில் முன்மொழிதல்களை, தனது பரிந்துரைகள் மற்றும் குறிப்புகளோடு, ரிசர்வ் வங்கிக்கு அனுப்பி வைக்கலாம்.

2). நீண்ட காலம் நிலைத்து செயலாற்றும் எற்றுமதியில் த்னியார் நிறுவனம் அல்லது கூட்டாளி வாணிப நிறுவனம், பின்வரும் தகுதி நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(i) DGFT சான்று வழங்கிய, நட்சத்திர அந்தஸ்து உடைய ஏற்றுமதி நிறுவனமாக அந்த தனியார் மற்றும் கூட்டானி நிறுவனம் விளங்கிட வேண்டும். அதன் ஏற்றுமதி வருடத்திற்கு ரூ.15 கோடியை விடவும் அதிகமாக இருத்தல் வேண்டும்.

(ii) அந்த ஏற்றுமதியாளர் KYC கொள்கைகளைப் பூர்த்தி செய்தவர் என்பதை அங்கீகரிக்கப்பட்ட முகவர் வகை-1வங்கி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அந்த நிறுவனம் ஏற்றுமதியில் ஈடுபட்டிருப்பதும் மேற்குறிப்பிட்ட ஏற்றுமதி வாணிப அளவை உடையதாகவும் இருக்க வேண்டும்.

(iii) கடந்த 3 நிதியாண்டுகளின் சராசரி ஏற்றுமதி வருவாயில் 10% அதிகமாக ஏற்றுமதி நிலுவை இல்லை என்பதும் அந்த ஏற்றுமதியாளரின் வாணிபப் போக்கு சீரானதாக இருக்க வேண்டும்.

(iv) சட்ட அமலாக்கப் பிரிவு CBI அல்லது எந்தவொரு அரசு செயல்துறையின் அறிவிப்புகளில் அவப்பெயர் ஏதும் ஈட்டாத நிறுவனமாக அந்த ஏற்றுமதியாளர் நிறுவனம் விளங்க வேண்டும். ரிசர்வ் வங்கியின் ஏற்றுமதியாளர் "எச்சரிக்கைப் பட்டியல்" மற்றும் வங்கித் துறை சார்ந்த "தவறியோர் பட்டியலில்" இந்த நிறுவனம் இடம் பெற்றிருக்கக் கூடாது.

(v) கடந்த மூன்று நிதியாண்டுகளின் சாராசரி ஏற்றுமதி வருவாயில் 10%ற்கும் அதிகமில்லாமல் / அல்லது நிறுவனத்தின் நிகர மொத்த நிதியின் 200% இரண்டில் எது குறைவோ அதைவிட அதிக அளவில் இல்லாமல் அந்நிய முதலீட்டளவு அமைந்திட வேண்டும்.

### B.10. பதிவுசெய்யப்பட்ட அறக்கட்டளை/சங்கம் (Trust/Society)களில் முதலீடுகள்

ரிசர்வ் வங்கியின் முன்அனுமதியுடன் பதிவுசெய்யப்பட்ட அறக்கட்டளை/சங்கங்கள் (உற்பத்தி/கல்வி/மருத்துவமணை சார்ந்த துறைகள்) தத்தம் துறைகளிலேயே வெளிநாடுகளில் JV/WOSல் முதலீடு செய்யலாம். பின்வரும் குறிப்பிட்ட தகுதிக்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் அறக்கட்டளை/சங்கங்கள் இதற்கான விண்ணப்பங்களை ODI-பகுதி-1 படிவத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கி – வகை-1 மூலம் கீழ்க்குறிப்பிடும் முகவரிக்கு பரிசீலனைக்கு அனுப்பி வைக்கலாம். தலைமைப் பொது மேலாளர், இந்திய ரிசர்வ் வங்கி, அந்நியச் செலாவணித்துறை, பன்னாட்டு முதலீடு பிரிவு, மைய அலுவலகம், அமர்கட்டிடம், 5வது தளம், கோட்டை, மும்பை-400 001.

<u>தகுதியை நிர்ணயிக்கும் கூறுகள்</u>

a. <u>அறக்கட்டளை</u>

i. இந்திய அறக்கட்டளைச் சட்டம் 1882 யின்கீழ் அந்த அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ii. அறக்கட்டளையின் உரிமைப்பத்திரம் பரிசிலனையிலிருக்கும் பன்னாட்டு மூலதனத்திற்கான அனுமதியை வழங்கிடவேண்டும்.

iii. இந்த பன்னாட்டு மூலதனம் அறக்கட்டளையின் அதன் நிர்வாகிகளால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

iv. அந்த குறிப்பிட்ட அறக்கட்டளை 'உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துக் கொள்க' (KYC) கோட்பாட்டை பின்பற்றி ஒரு நம்பகத்தன்மையுடைய செயல்பாட்டை நடத்தி வருகிறது என்பது குறித்து அங்கீகரிக்கப்பட்ட

முகவர் வங்கி-வகை -1 திருப்தி அடைந்திருக்க வேண்டும்

v. குறைந்தபட்ச 3 ஆண்டுகளாவது அந்த அறக்கட்டளை தொடங்கி செயல்பட்டிருக்கவேண்டும்.

vi. ஒழுங்குமுறையாளர்/அமலாக்கப்பிரிவு (உம்) அமலாக்கப்பிரிவு இயக்கம் மத்தியப் புலனாய்வுத்துறை ஆகியவற்றிய மோசமான பட்டியல் எதிலும் அந்த அறக்கட்டளையின் பெயர் இடம்பெற்றிருக்கக்கூடாது

b. <u>சங்கம்</u>

(i) சங்கம் – சங்கத்தின் பதிவுச்சட்டம் 1860யின்கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்

(ii) அந்த சங்கத்தின் "செயல் குறிப்பாணை மற்றும் செயல் முறை விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் அந்த சங்கத்தின் பன்னாட்டு மூலதனத்தை அனுமதிக்க வேண்டும். அதோடு அதன் கட்டுப்பாட்டு குழு/நிர்வாக /மேலாண்மை கமிட்டி அந்த பன்னாட்டு மூலதன யோசனைக்கு ஒப்புதல் அளித்திருக்கவேண்டும்

(iii) அந்த சங்கம் 'உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துக் கொள்க' (KYC) கோட்பாட்டை பின்பற்றி ஒரு நம்பகத்தன்மையுடைய செயல்பாட்டை நடத்தி வருகிறது என்பது குறித்து அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கி-வகை -1 திருப்தி அடைந்திருக்க வேண்டும்

(iv) குறைந்தபட்ச 3 ஆண்டுகளாவது அந்த சங்கம் தொடங்கி செயல்பட்டிருக்கவேண்டும்

(v) ஒழுங்குமுறையாளர்/அமலாக்கப்பிரிவின் இயக்கம்/ புலனாய்வுத்துறை ஆகியவற்றின் மோசமான பட்டியல் எதிலும் அந்த சங்கத்தின் பெயர் இடம்பெற்றிருக்கக்கூடாது

பதிவுடன் கூடவே அதன் செயல்பாடுகளுக்காகச் சிறப்பான உரிமம் அல்லது ஒப்புதல் அரசாங்கத்தின் உள்நாட்டுத்துறை அமைச்சகம் அல்லது உரிய வட்டார அதிகாரியிடமிருந்து பெறவேண்டியிருப்பின் அதற்கேற்ப, அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கி அத்தகு உரிமம் அல்லது ஒப்புதலை விண்ணப்பதாரர் பெற்றுள்ளார் என்பதை உறுதி செய்திடல்வேண்டும்.

## B.11 முதலீட்டுக்குப் பின்னர் மாற்றங்கள் / நடப்பிலிருக்கும் JV/WOSல் கூடுதலான முதலீடுகள்

இந்திய நிறுவனம் சட்ட விதிகளுக்குட்பட்டு JV/WOS நிறுவனம் நடவடிக்கைகளை பல்வகையில் மாற்றலாம் / துணை நிறுவனத்தின் பங்குகளைக் குறைக்கலாம் / வெளிநாட்டு நிறுவனத்தில் கைக்கொண்டுள்ள பங்குப்பத்திர அளவுகளை மாற்றலாம்.

நிதியியல் சேவைத் துறைகளில் செயல்படும் நிறுவனங்கள் விதி எண் 7ன்படி உள்ள நிபந்தனைகளை இவ்விஷயத்தில் பூர்த்தி செய்திட வேண்டும். அனைத்து மாற்றங்களும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கியின் மூலம் ரிசர்வ் வங்கிக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். மாற்றத்திற்கான முடிவுகளை, JV/WOSன் சட்டபூர்வ (செயல்படும் நாட்டின் விதிக்கேற்ப) அதிகாரமுடைய நபரின் அதிகாரத்தின்படி எடுக்கப்பட்ட 30 நாட்களுக்குள் இவ்வாறு தெரிவிக்க வேண்டும். அதை (வங்கிக்கு அனுப்பும்) செயல்பாட்டு ஆண்டு அறிக்கையிலும் தெரியப்படுத்த வேண்டும். (APR ஆண்டு செயல்பாட்டு அறிக்கை – OD படிவத்தின் பகுதி III).

### B.12 ஒப்பந்தம் / ஏலம் மூலம் அயல்நாட்டு குழுமத்தைக் கைக்கொள்ளுதல்

இந்திய நிறுவனம் இழப்பீட்டு உறுதிப்பணத்தை செலுத்தலாம், அல்லது விடுபட உறுதிப்பத்திரத்தை அளிக்கலாம். இவ்வாறு ஏலம் அல்லது ஒப்பந்தம் செயல்முறை மூலம் வெளிநாட்டுக் குழுமத்தை கைக்கொள்ளும் முயற்சிகளை மேற்கொள்ளலாம். அறிவிப்பின் 14வது விதிப்படி, பின்னர் தேவையான பணத்தை அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கி மூலம் அனுப்பலாம்.

### B.13 இந்திய நிறுவனத்தின் பொறுப்புரிமைகள்

அயல்நாட்டில் நேரடி முதலீடு செய்த இந்திய நிறுவனத்திற்குப் பின்வரும் பொறுப்புரிமைகள் உண்டு, (a) முதலீட்டின் அத்தாட்சி அடையாளமாக பங்குப் பத்திர சான்றிதழைப் பெறுதல். (b) அயல்நாட்டிலிருந்து பெற வேண்டிய பாக்கிகளை இந்தியாவிற்று கொண்டு வருதல். (c) அறிவிப்பில் விதி எண் 15ல் குறிப்பிட்டுள்ளபடி தேவையான ஆவணங்கள் / ஆண்டு செயல்பாட்டு அறிக்கை ஆகியவற்றை ரிசர்வ் வங்கிக்கு அளித்திடுதல்.

### B.14 JV/WOS பங்குப் பத்திரங்களை விற்பனை மூலம் மாற்றுதல்

இந்திய நிறுவனங்கள் ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியின்றியே தனது அந்நிய முதலீட்டுப் பங்கினை பின்வரும் நிகழ்ச்சிகளில் மீட்டுப் பெறலாம்.

(i) வெளிநாட்டு பங்குப்பரிவர்த்தனை நிலையத்தில் JV/WOSன் பங்குகள் பட்டியலிடப்பட்டிருந்தால்

(ii) இந்திய முன்னேற்றும் குழுமத்தின் பங்குகள் இந்தியாவிலுள்ள பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்பட்டு, அதன் நிகர மதிப்பு ரூ.100 கோடிக்கும் குறையாமலிந்தால்

(iii) இந்திய முன்னேற்றும் குழுமத்தின் பங்குகள் பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடப்படாமல் இருந்து, அவர்களின் வெளிநாட்டு திட்ட முதலீடு 10 மில்லியன் அமெரிக்க டாலருக்கு அதிகமாக இல்லாமலிருந்தால்

2. மூலதனத்தை மீட்பது என்பது பின்வரும் நிபந்தனைக்கு உட்பட்டது.

i. அந்த விற்பனையின் மூலம் முதலீடு மதிப்பிழந்த ஒன்றாக ஆகிவிடக்கூடாது.

ii. பன்னாட்டு JV/WOSன் பங்குகள் எந்த பங்குபரிவர்த்தனை மையத்தில் பட்டியலிடப்பட்டுள்ளதோ அதன் மூலமே விற்பனை வர்த்தகம் நிகழ்த்தப்பட வேண்டும்.

iii. அவ்வாறு பங்குகள் பன்னாட்டு பங்குபரிவர்த்தனை மையத்தில் பட்டியலிடப் படவில்லையெனில் அந்த பங்குகள் விற்பனை தனியானதொரு ஏற்பாட்டின் மூலம் செயல்படுத்தப்படுமானால் என்று உறுதிசெய்யப்படவேண்டும். அதாவது JV/WOS நிறுவனத்தின் சமீபத்திய தணிக்கை செய்யப்பட்ட நிதியியல் அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு (பட்டயக்கணக்காயர் சான்றளிக்கப்பட்ட பொதுக்கணக்காளர் மூலம் தணிக்கை) நியாயமாகக் கணக்கிடப்பட்ட பங்குகளின் விலையைவிட குறைவாக இல்லாமல் பங்குகளின் விற்பனை விலை நிர்ணயிக்கப்படவேண்டும்.

iv. லாப ஈவுப்பங்கு தொழில்நுட்ப கட்டணம், ராயல்டி, ஆலோசனைக்கட்டணம் தரகுக் கட்டணம், இதர உரிமைக்கட்டணங்கள் மற்றும் JV/WOS நிறுவனங்களிடமிருந்து செய்யப்படும். ஏற்றுமதி தொகை நிலுவை போன்ற வகையறாக்களில் இந்திய நிறுவனம் எந்தவொரு பாக்கியும் வைத்திருக்கக் கூடாது.

v. பன்னாட்டு நிறுவனம் குறைந்தபட்சம், ஒரு முழு ஆண்டு செயல்பட்டிருக்க வேண்டும். அதன் ஆண்டு செயல்பாட்டு அறிக்கை ரிசர்வ் வங்கிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்க வேண்டும்.

vi. இந்தியாவிலுள்ள புலனாய்வுத்துறை/பொருளாதாரத்துறை/செபி/ஒழுங்கு முறை கட்டுப்பாட்டாளர் அல்லது எந்தவொரு ஒழுங்குமுறை அதிகாரி எவரின் ஆய்வு/சோதனை கீழ் அந்த இந்திய நிறுவனம் இருக்கக்கூடாது

மேற்கண்ட விதங்களில் இருந்தால், முதலீட்டுப் பங்கினை இந்திய நிறுவனம் மீட்டும் பெறலாம். அதன் விவரங்களை மீட்பு செய்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட்ட வங்கி முகவர் மூலம் தெரிவிக்கலாம். மேற்குறிப்பிட்டவை தவிர மற்றவர்கள் ரிசர்வ் வங்கியின் முன் அனுமதியைப் பெற வேண்டும்.

## B.15 பங்குகளை அடமானம் வைத்தல்

அறிவிப்பின் விதி எண் 18படி, இந்திய நிறுவனம் தனக்கே, அல்லது வெளிநாட்டிலுள்ள JV/WOSக்காகவோ கடன் வசதி பெற JV/WOSன் பங்குகளை அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கியிடமோ அல்லது இந்தியாவிலுள்ள பொதுத்துறை சார்ந்த நிதிநிறுவனத்திடமோ அடமானம் வைக்கலாம். அயல்நாட்டிலுள்ள கடனளிக்கும் நிறுவனத்திற்கு மாற்றம் செய்வதன் மூலம் JV/WOS பங்குகளை அடமானம் வைத்தும் கடன் பெறலாம். ஆனால் அந்த கடனளிக்கும் நிறுவனம் ஒரு வங்கி போல அந்த நாட்டிலுள்ள ஒழுங்குபடுத்துதலுக்கும் மேற்பார்வைக்கு உட்பட்டதாயிருக்க வேண்டும். அவற்றில் இந்திய நிறுவனத்தின் மொத்த

நிதிபொறுப்புகள் இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது விதிக்கின்ற வரம்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

### B.16 நேரடி அந்நிய முதலீடுகளில் இழப்பீட்டு பாதுகாப்பு வசதி செய்தல்

1. இந்தியக் குடியிருப்போர் அயல்நாடுகளில் செய்யும் நேரடி முதலீடுகளில் அந்நியச் செலாவணி மாறுதல்களால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பாதுகாப்பு செய்து கொள்ள விரும்புவோருடன் அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கிகள் வருங்கால / விருப்பமுறை ஒப்பந்தங்கள் மூலம் பங்கு மற்றும் கடன் பத்திர முதலீடுகளுக்கு இழப்பீடு பாதுகாப்பு இடர்வரவினை ஆய்ந்தபின் செய்து தரலாம். அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கி (வகை 1) இத்தகு வருங்கால ஒப்பந்தங்களை ரத்து செய்யவும், அவ்வாறு ரத்து செய்யப்பட்டவற்றில் 50%ஐ மீண்டும் பதிவு செய்து கொள்ளவும் அனுமதி உண்டு.

2. அந்நிய நேரடி முதலீடுகளின் சந்தை நிலைமாறுபாடுகளால் சந்தை மதிப்பு மிகவும் குறைந்தால், இழப்பீட்டு பாதுகாப்பு இல்லாது போய்விடும் நிலை ஏற்பட்டால், முதிர்வுக் காலம் வரை ஒப்பந்தம் நீடிக்கும். ஒப்பந்த முதிர்வுகளில் அன்றைய சந்தை நிலவரப்படி அந்த ஒப்பந்தம் மீண்டும் புதுப்பிக்கப்படலாம்.

## பகுதி. C அயல்நாட்டு பங்குப்பத்திரங்களில் முதலீடுகள்

### C.1. சில சமயங்களில் அயல்நாட்டு பங்குப்பத்திரங்களைக் கைக்கொள்ளுதல்/ வாங்குதல் இவற்றிற்கான அனுமதி

ஒரு இந்தியக் குடியிருப்பாளரான தனிநபருக்கு பின்வருவனவற்றிற்கு பொது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

a. அயல்நாட்டுக் குடியிருப்பாளர் ஒருவரிடமிருந்து அயல்நாட்டு பங்குப்பத்திரங்களை இந்தியக் குடியிருப்பாளர் கொடையாகப் பெறுவதற்கு (அல்லது)

b. பணமின்றி பணியாளர்களுக்கு அளிக்கப்படும் விருப்பத்தேர்வு முறையின்கீழ் வழங்கப்படும் பங்குப்பத்திரங்கள் அயல்நாட்டுக் குழுமத்தால் இவருக்கு வழங்கப்பட்டு அதன் பொருட்டு எந்த பண அனுப்புதலும் நிகழவில்லை என்கிறபட்சத்தில் அவ்வகையில் பங்குப்பத்திரங்களைப் பெறவும் (அல்லது)

c. இந்தியக் குடியிருப்பாளரின் அல்லது அயல்நாட்டுகுடியிருப்பாளர் ஒருவரிடமிருந்து வாரிசுரிமையாக பங்குப்பத்திரங்கள் வழங்கப் படலாம்.

d. அயல்நாட்டுக் குழுமம் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் விருப்பத் தேர்வு முறையின்கீழ் பின்வரும் வகையில் பங்குப்பத்திரங்களை ஒருவருக்கு வழங்கலாம். (1) பணியாளர் என்ற முறையில் (2) அயல் நாட்டுக் குழுமத்தின் இந்தியக் கிளையின் இயக்குநர் என்ற முறையில் (3) அல்லது அந்த குழுமத்தின் துணை இந்திய நிறுவனத்தில் பணியாளர் அல்லது இயக்குநர் என்ற முறையில் இந்தியக் குழுமத்தில் நேரடியாகவோ, துணை நிறுவனத்தின் மூலமாகவோ சிறப்பு நோக்கத்திற்கான நிறுவனத்தின் மூலமாக (SPV) 51%ற்கும் குறையாத அளவிற்கு அயல்நாட்டு நிறுவனம் முதலீடு செய்திருக்குமாயின் அந்த நிறுவனத்தின் பங்கு முதலீடுகளில் விருப்பத்தேர்வு முறையின்கீழ் பங்குகள் ஒருவருக்கு வழங்கப்படலாம். அந்த திட்டத்தின்கீழ் பங்குகளை வெளியிடும் குழுமம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாக சிறப்பு நோக்கத்திற்கான ஏற்படுத்தப்பட்ட நிறுவனம் / ஒரு படிகீழேயுள்ள துணை நிறுவனம் பங்குகளை வெளியிடும் அந்த நிறுவனத்தின் மூலதனத்தில் 51%ற்கும் குறையாத அளவிற்கு பங்குகளை ஒரு சீரான முறையில் உலகெங்கிலும், அளித்திட முன்வருதல் வேண்டும். (4) அந்த இந்தியக் குழுமம் அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கியின் மூலமாக ரிசர்வ் வங்கிக்கு பண அனுப்பீடுகள்/பயன்பெறுவோர் ஆகியவை குறித்த தகவல் அறிக்கையை ஆண்டுக்கு ஒரு முறை அளித்திட வேண்டும். மேற்கண்ட முறையில் கைக்கொள்ளப்பட்ட பங்குகளை ஒரு இந்தியக் குடியிருப்பாளர் விற்கலாம். ஆனால் அந்த பங்குகள் விற்ற தொகை உடனடியாக அல்லது விற்ற 90 நாட்களுக்குள் இந்தியாவிற்கு மாற்றப்பட வேண்டும்.

e. பணியாளர் விருப்பத்தின்கீழ் அயல்நாட்டுக் குழுமங்கள் இந்தியக் குடியிருப்பாளருக்கு வழங்கிய பங்குகளை, பின்வரும் கட்டளைகளுக்குட்பட்டு மீண்டும் வாங்கலாம்.

    i. அந்த பங்குகள் அந்நியச் செலாவணி நிர்வாகச் சட்டம் 1999ன்கீழ் வகுக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வெளியிடப்பட்டிருக்கவேண்டும்.

    ii. முதன்முதலில் அளிக்கப்படும் விருப்பத்தேர்வு ஆவணத்தின் கருத்துப்படி பங்குகளை திருப்பி வாங்கப்பட உரிமையிருக்க வேண்டும்

    iii. அங்கீகரிக்கப்பட்ட முகவர் வங்கியின்மூலம், பண அனுப்பீடுகள் மற்றும் பயன்பெறுவோர் குறித்த தகவல்கள் அடங்கிய ஆண்டறிக்கை அளிக்கப்பட வேண்டும்.

f. மற்ற சமயங்களில் அயல்நாட்டுப் பங்குப்பத்திரங்களைக் கைக்கொள்ள பொதுவான அல்லது குறிப்பான அனுமதி வழங்கப் படாதபோது, ரிசர்வ் வங்கியின் ஒப்புதல் பெறுதல் அவசியம்.

### C.2 இந்தியக் குடியிருப்பாளர் அயல்நாட்டுப் பங்குப்பத்திரத்தை மாற்றுதல்

